செ.வெ.எண்: 04 நாள்:02.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் கோவில்பத்து, நாலுவேதபதி, வெள்ளபள்ளம், மற்றும் வானவன் மகாதேவி ஆகிய பகுதிகளில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணிகளையும், பிரதம மந்திரி கிராம சதக்யோஜனா திட்டத்தின் கீழ் கோவில்பத்து ஊராட்சி முதல் வானவன் மகாதேவி வரை 4.82 கி.மீ நீளம் ரூ.3,41,74,600 மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியினையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் வெள்ளபள்ளம் ஊராட்சியில் வெள்ளபள்ளம் முதல் வானவன் மகாதேவி வரை ரூ.5.29 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் சாலை பணிகளையும், வானவன்மகாதேவி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 4.36 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளையும், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் 4.95 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணிகளையும், காமாட்சிஅம்மன் கோவில் சாலை 100மீ நீளத்திற்கு ரூ.5.28 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினையும், நாலுவேதபதி ஊராட்சியில் ரூ.5.29 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் சாலை பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதால் கோவில்பத்து, வானவன்மகாதேவி, நாலுவேதபதி ஆகிய இடங்களில் உள்ள புயல் பாதுகாப்பு கட்டிடத்ததை ஆய்வு செய்து பாதுகாப்பு கட்டிடத்தை தூய்மையாகவும், தண்ணீர் மற்றும் மின்சாரவசதி போன்ற அடிப்படை வசதிகளை முன்னேற்பாடு செய்து தருமாறும் அலுவலருக்கு அறிவுறுத்தினார். மேலும், சிறு பாலங்கள், தார்சாலை அமைக்கும் பணிகளை மழை காலத்திற்கு முன்பாகவே விரைந்து முடிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். மேலும், நாலுவேதபதி நர்சரியில் வளர்க்கப்படும் மரக்கன்றுகளை பார்வையிட்டார். வானவன் மகாதேவி, வெள்ள பள்ளம் மீனவர் காலனி, மற்றும் நாலுவேதபதி ஊராட்சி மன்ற சமுதாய கூடத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமை பார்வையிட்டார். வெள்ளப்பள்ளம் மீனவர் காலனியில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றி வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைஞாயிறு வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி பொறியாளர்கள், ஒன்றியம் பணி மேற்பார்வையாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**